# பூராயம்




## குத்தினால் கத்துவோம்!

ராஜேஸ்வரிக்கும், கி.செ.துரைக்கும் வக்காலத்து வாங்கி கருணாகர மூர்த்தி எழுதியிருக்கிற மடலைப் பார்த்தால், 'கத்தினால் குத்துவோம் குத்தினால் கத்துவோம்' என்று சொல்வது மாதிரி இருந்தது.

நல்லதோ குப்பையோ எதையாவது நாங்கள் எழுதுவோம், யாரை வேண்டுமானாலும் விமர்சிப்போம். ஆனால் எங்களை நீங்கள் விமர்சிப்பதை பொறுத்துக் கொள்ள மாட்டோம்.

ஏனெனில் நாங்கள் இலக்கியர்கள், பெண்கள், தமிழர்கள். எனவே நீங்கள் வேண்டுமானால் இலக்கியரல்லாத, தமிழரல்லாத, ஆண்களை விமர்சியுங்கள் என்று சொல்வது மாதிரி இருக்கிறது.

*- திவாகரன், வோல்தம்ஸ்ரோ*

## எங்கே போனது இறையாண்மை

இலங்கைப் பிரச்சினையில் ஓரளவுக்கு மேல் தலையிட முடியாதாம். காரணம் கேட்டால் இறையாண்மை, இறையாண்மை என்று இந்திய மத்திய அரசும் அதற்கு ஒத்தூதும் உலகத் தமிழரின் தலைவர் என்று கூறிக் கொள்ளும் 'களைஞரும்' கூக்குரலிடுகின்றனர்.

சரி அவர்களது விவாதப்படியே சிறிலங்கா அரசின் இறையாண்மையை மதிப்பதாகவே எடுத்துக் கொள்வோம். ஆனால் சிங்களக் கடற்படை தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்வது இந்திய இறையாண்மைக்கு (தமிழகம் இந்தியாவிற்குள் இருப்பதாகத் தானே கூறுகிறார்கள்) விடுக்கப்படும் அச்சுறுத்தல் அல்லவா? அதுமட்டுமன்றி எல்லை தாண்டிய பயங்கரவாதம் அல்லவா?

இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க முடியாத கையாலாகாத நாடாக இந்தியா மாறிவிட்டதா

*- அஜீவன், வோல்தம்ஸ்ரோ*

## சாத்திரிக்குப் பயமோ?

சாத்திரியார் நீர் சரியான பயந்த பீச்சாண்டி. போனமுறை ***ஒரு பேப்பர்*** இல் சொன்னனீர் அதில இருக்கின்ற இரண்டு பெயரினை பற்றி எழுதிற தெண்டு. பிறகு சாமியார் பொம்பிளை ஒன்றும் செய்யாது என்ற துணிவில அவாவைப் பற்றி எழுதிப்போட்டீர்! ஏன் இழுத்து வைச்சு அறுத்துப் போடுவினம் என்று பயமே?

*- கருணா*

## துகிலுரிப்பு அல்ல தோலுரிப்பு

சாத்திரி தரும் பயோடேற்றாக்கள் துகிலுரிப்பு அல்ல அவர் துச்சாதனனும் அல்ல. அவை புறம்போக்குகளை தோலுரித்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளதால் கருணாகர மூர்த்திக்கும் ஏனோ அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஆனையிறவினை விடுதலைப் புலிகள் வெற்றி கொண்டபோது அங்கிருந்த சிங்கள பெண் சிப்பாய்களை அவர்கள் வன்புணர்வு செய்து கொன்றதாக கண்ணால் கண்ட சாட்சி போன்று இராஜேஸ் பாலா கூசாமல் பொய் சொல்லித் திரிந்தபோது, கருணாகரமூர்த்தி கோமாவில் இருந்தாரா? அல்லது அந்தத் தகவலில் அவருக்கும் உடன்பாடா?

*- நிர்மலன், ஹனோவர்*

## மீண்டும் வரும்

மட்டக்கிளப்பானின் அலசுவாரம் பகுதியை வாசிக்கும் போது தான் அந்தக் காலத்துக் கதிர்காம யாத்திரையின் அருமை, இனிமை புரிகிறது. எம் தமிழர்களின் கால் பதிந்த மண் இன்று பறிபோயிருக்கிறது என்ற மட்டைக்கிளப்பானின் ஆதங்கத்தையும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆனால் அண்மைக்காலமாக கதிர்காமம் காட்டுப்பகுதிக்குள் தமிழன் அதிலும் வீரத் தமிழர்கள் மீண்டும் கால்பதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி ஓரளவுமகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகிறது.

காலங்கள் மாறும், காட்சிகள் மாறும். அப்பொழுது மீண்டும் அன்றுபோல் பாதயாத்திரை செய்து முருகனைத் தரிசிக்கும் நாளும் வரும்

*- கனகலட்சுமி, ஜெர்மனி*

## அசிங்கங்கள் வேண்டாம்

கடந்த ***ஒரு பேப்பர்*** இதழில் சினிமாப் பக்கத்தில் அய்யனால் எழுதப் பட்டிருந்த 'என்ன கைமாறு செய்யப் போகிறோம்' என்ற கட்டுரையில் குழந்தை சண்முகலிங்கத்தின் கவிதை ஒன்றை மேற்கோள் காட்டியுள்ளீர்கள். அவர் அந்தக்கவிதையை எந்த நோக்கத்தில் எழுதினாரோ தெரியவில்லை. மக்களை உசுப்பேத்த வேண்டி அதனை இணைத்திருந்தாலும், இத்தகைய பாலியல் உணர்வுகள் பற்றிய கவிதைகளை பிரசுரிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு சமூகப்பத்திரிகை என்ற வகையில் பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்.

*- ரூபன், கிறீன்பேர்ட்*

## இந்தியா சர்வாதிகார நாடா?

கடந்த ***ஒரு பேப்பர்*** ரில் வந்த சபேசனின் அரசியல் அலசலைப் பார்க்கும் போது இந்தியா ஜனநாயக நாடா அல்லது சர்வாதிகார நாடா என்ற குழப்பம் ஏற்படுகிறது. கலைஞர் காங்கிரஸ் கட்சியைப் பகைத்து அதனால் ஆட்சி கவிழ்ந்து, அவரும் சிறைக்கு செல்வதை யாரும் விரும்ப மாட்டார்கள் என அவர் எழுதியிருக்கிறார்.

ஆளும் கட்சியைப் பகைத்தால் கலைஞர் சிறையிலடைக்கப்படுவார் என்றால் இந்தியாவில் ஜனநாயகம் நடைமுறையில் இல்லையா?

கருணாநிதி குற்றம் இழைத்துள்ள நிலையில் ஆளும் கட்சியின் தயவினால் தப்பியுள்ளாரா?

அல்லது குற்றம் எதுவும் இழைக்காத நிலையிலும் ஆளும் கட்சியை எதிர்த்தால் சிறையிலடைக்கப்படுவாரா? ஒன்றுமே விளங்கவில்லை.

*- குகன், ஹரோ*

## வேண்டாம் அறுவை

வேறெங்கும் காணாத பல அரிய தகவல்களைத் தகவல் களஞ்சியமாகத் தொகுத்துத் தரும் உமா மகாலிங்கத்தின் பகுதி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

ஆனால் அறுவைப் பக்கம் என்ற பெயரில் அருமந்த பக்கத்தை வீணாக்கி வருகிறீர்கள். இது குறித்து ஏற்கனவே பல வாசகர்கள் பூராயம் பகுதியில் முறையிட்டிருந்த போதும் அதைச் செவிமடுப்பதாயில்லை.

தயவு செய்து அந்தப் பக்கத்திலும் தகவல் களஞ்சியம் போன்ற வாசகர்களுக்குப் பயனுள்ள விடயங்களைத் தாருங்கள்.

*- கலா, பாரிஸ்*

***ஒரு பேப்பர்*** தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகப் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.

*ஆ—ர்*

# கொழும்புக் கடிதம்

எல்லாரும் எப்படியிருக்கிறியள்

தொடர்ந்தும் எங்கடை கஷ்டங்களையும் கவலைகளையும் சொல்லிக் கடிதம் எழுத வேண்டிக் கிடக்குது எண்டு நினைக்கக் கவலையாக் கிடக்கு

இஞ்சை எங்கடை சகோதர இனம் பெரிய எதிர்பார்ப்போடை வெற்றிச் செய்திக்காய் காத்துக் கொண்டு இருக்குது. அந்த ருசியிலை சாமான் விலை ஏறுறதையோ வாழ்க்கைச் செலவு கூடிக் கொண்டு போறதைப் பற்றியோ சனத்துக்குக் கவலைப்படவோ கோபப்படவோ நேரமில்லாமல் கிடக்குது.

யுத்த மது அருந்திய மந்திகளைப் போலச் சனம் இருக்கிறது மஹிந்த கொம்பனிக்கு வாச்சுப் போச்சுது. தங்கடை இஸ்டத்துக்கு ஆடிக் கொண்டிருக்கினம். ஆனால் இப்ப நடக்கிற யுத்தம் கத்தி முனையிலை நடக்கிற மாதிரி எண்டதை ஒருத்தரும் உணர இல்லை.

அங்கை யுத்த முனையிலை ஒரு சறுக்கல் வந்தாலும் சனத்தின்ரை கோவம் தன்னை நோக்கித் திரும்பும் எண்டதை அறியாமல் அல்லது அறியாத மாதிரி நடிச்சுக் கொண்டு மஹிந்தர் இருக்கிறார். சரி நாங்களும் நடக்கிறதைப் பாக்கத் தானே போறம்.

இத்தனை அவலத்துக்குள்ளையும் கொழும்பிலை இருக்கிற எங்கடை சனத்திலை முக்காவாசிச் சனம் ஏதோ சொர்க்கபுரியிலை இருக்கிறம் எண்ட நினைப்பிலை சற்றலைற் ரீவீக்குள்ளையும் சின்னத்திரைத் தொடர்களுக்குள்ளையும் மூழ்கிக் கிடக்குது.

வீட்டை விட்டுக் கடைத் தெருவுக்குப் போறதெண்டாலும் ஓட்டோவைத் தான் பிடிக்கினம். இதை மணந்து பிடிச்ச மஹிந்தரின்ரை பரிவாரங்கள் இப்போ ஓட்டோக் காரரை எல்லாம் சேத்து புதுசா ஒரு புலனாய்வுப் பிரிவு தொடங்கியிருக்கினம்.

இனியென்ன எங்கடை சனம் எப்ப பாங்குக்குப் போகுது, எவ்வளவு காசு எடுத்துக் கொண்டு வருகுது எண்டு மணந்து பிடிச்சிட்டு ஒட்டுக் குழுக்களை அனுப்பி கடத்தல், கப்பப் பறிப்பை ஓஹோ எண்டு செய்யலாம் தானே.

ஏதோ தமிழாக்களை வெண்டு முடிச்சாச்சு எண்ட நினைப்பிலை இப்ப முஸ்லிம் ஆக்களோடை கைவரிசையைக் காட்டத் தொடங்கி இருக்கினம்.

நாப்பது அம்பது வருசத்துக்கு முந்தி தமிழாக்களுக்கு என்ன நடந்ததோ அது இப்ப முஸ்லிம் ஆக்களுக்கு நடக்கத் தொடங்கி இருக்குது. எப்படித் தமிழ் தலைவர்கள் அப்ப நடந்து கொண்டினமோ அதே மாதிரி இப்ப முஸ்லிம் அரசியல் வாதிகள் அறிக்கை விடுகினம். ஹர்த்தால் செய்ய வெளிக்கிட்ட முஸ்லிம் சனத்தை அமைதியாயிருங்கோ பொறுமையா இருங்கோ எண்டு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கினம்

ம்ம்ம்... இந்தப் பொறுமை, அமைதி, அகிம்சை எல்லாம் எவ்வளவு காலத்துக்கு எடுபடும் எண்டு பாப்பம்

சரி அடுத்த கடிதத்திலை சந்திப்பம்

*- கொழும்பான்*




Natural Herbal Medicine

GURUJI

S.L SAHADEVA RAJA (KANNAN)

ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலை கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களையும் இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

நாடி பிடித்துப்பார்த்தல் **இலவசம்**

இந்தியாவில் 8 தலைமுறையாக வைத்தியம் செய்தவர்கள் இப்போது லண்டனிலும் ! சந்தர்ப்பத்தை தவற விடாதீர் !!

ஆஸ்த்மா, தோல்வியாதி, புற்றுநோய், நீரிழிவு, இரத்த அலர்ஜி, மாதவிடாய்ப் பிரச்சினை, குடற்புண், மூலநோய், முடி உதிர்தல், மூட்டு நோ, தலைவலி, பக்கவாதம், நரம்பியல், ஞாபகமறதி, தும்மல், அலர்ஜி, எக்சிமா, பயம் மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும் இயற்கை மூலிகை வைத்தியப்படி பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியம் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

Come and meet the Group Leader tribalAdivasi Herbal Medical practitioner and get rellef from all kinds of diseases,illness diagnoised only by pulse reading,Giving wonderfull natural herbal treatment,Also Herbal Treatment for mor than 360 kinds diseases with out any side effects Asthma, Allergy, Diabetes, Arthritis (Join Pain), Fear, Memory Loss, Menstrual Problem, Ulcer, Dermatitis, All Type Piles, Kidney Stone, Cancer, Paralysis, Neuropathy, Nerous Weakness, Hair Fall, Ezema , Blood Allergy ,Headaches .



Evershine Dry Cleaner (Upstairs) 123 Mitcham Road, Tooting, London, SW17 9PE Near By Tesco

MOB: 07918 995 631 & 07529 400 523